# தமிழ்ச் சிட்டு

## நெருப்பு உழைப்பு அல்லவோ
## சிறப்புகள் நிகழ்த்தும்!

இருப்பதில் குறைசொல்ல
 எல்லார்க்கும் தெரியும்!
விருப்பமில் லாததை
 வெறுப்பதும் இயல்பே!
உருப்படி யாய்எதும்
 உருவாக்கல் கடினம்!
நெருப்புழைப் பல்லவோ
 சிறப்புகள் நிகழ்த்தும்!

உண்மையும் உறுதியும்
 ஒழுக்கமும் உழைப்பும்
திண்மையும் நேர்மையும்
 தெளிவுளமும் அன்றோ
அண்மையும் செய்மையும்
 ஆக்கங்கள் செய்யும்!
பெண்மையர் ஆண்மையர்
 பிரிவின்றிச் செய்க!


ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

குரல் : 2
இசை: 1

விலை:
உருபா : 1-50

# மருத்துவக் குறிப்புகள்

- நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் நாள்தோறும் காலையில் ஒரு கைப்பிடி பொன்னாங்காணிக் கீரையை இடித்து, அல்லது அம்மியில் வைத்து நசுக்கி ஓர் அரைக் குவளைச் சாறு எடுத்து, வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர, நாளடைவில் அந்நோய் அறவே குணமாகும். உடலும் மினு மினுப்புப் பெறும்.

- பச்சைக் கறிவேப்பிலையைக் கொஞ்சம் காலையில் வாயில் போட்டு மென்று விழுங்கி வர, கண்ணொளி கெடவே கெடாது. இறுதிவரை கண்கள் எவ்வகைப் பழுதும் அடை-யாது.

- வயிற்றுப் போக்குள்ளவர்கள், சோறு வடித்த கஞ்சியில் கொஞ்சம் உப்புப் போட்டு இரண்டு மூன்று வேளை பருகி வர உடனே குணமாகும்.

- தேள் கொட்டினால் மிளகாய்ப் பூண்டு என்னும் செடியின் பாலைக் கொட்டு வாயில் வைத்துத் தேங்காய் நாரைக் கொளுத்தித் தீயை அணைத்து வரும் புகையைக் காட்டினால் ஐந்து நிமையத்தில் நஞ்சு வெளியே வந்து, கடுப்பு உடனே குறைந்து போகும். வேறு எந்த மருந்துக்கும் இதுபோல் குணமளிக்கிற தன்மை இல்லை என்பதை உணர வேண்டும்.

- மக்களுக்கு வருகின்ற நோய்களில் 76 விழுக்காடு அவர்களின் மனத்தாக்கங்களினாலேயே வருகின்றன என்று, அமெரிக்க ஏல் பல்கலைக் கழகத்தின் மருத்துவ ஆய்வுக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன. பல நோய்களை மன வலிமை கொண்டே தீர்த்து விடலாம் என்பது அவர்களின் கருத்து.

ஏதாவது ஒரு நோய் உடலில் தோன்றியதாக அறியப் பெற்றவுடன் நோயாளி காலை, நண்பகல், மாலை, இரவு படுக்கு முன் ஆகிய நேரங்களில், ஐந்தைந்து நிமையம் முடிந்தால் பப்பத்து நிமையம் அந்த நோய் தனக்கு இல்லை என்றும், அது தனக்கு வராது என்றும், அப்படியே வந்தாலும், அது விரைவில் நலமாகிவிடும் என்றும், நோயில்லாமல் வாழ்வதையே நான் விரும்புகிறேன் என்றும், நோய் எனக்குத் தொல்லை தராது என்றும் மனத்தில் ஆழமாகவும் அழுத்தமாகவும், வேறு மன அசைவுகளையும் அலைவுகளையும் தவிர்த்து. எண்ணுதல் வேண்டும். மனத்தில் ஏற்படும், அல்லது தேங்கி நிற்கும் உணர்வுகளுக்கும் அவற்றின் அழுத்தங்களுக்கும் ஏற்பவே உடலின் உள்ளேயும் வெளியேயும் சிறிய மாறுதல்களும் பெரிய மாறுதல்களும் ஏற்படு-கின்றன என்றும், அவற்றுள் நோய் நீக்கமும் ஒன்று என்றும் ஏல் பல்கலைக் கழக மருத்துவயியல் அறிஞர்கள் ஆராய்ந்து கூறு கின்றனர்.

- தேவையான அளவு வாழைப்பூவை உரலில் இட்டு இடித்துப் பிழிந்து கால் படி (ஒரு பெரிய குவளை) சாறு பிழிந்து, அதில் நல்ல சீரகத்தை அம்மியில் நீர் விட்டுக் கெட்டியாக அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அச்சாற்றில் கரைத்துக் காலை வெறும் வயிற்றில் சில நாள்கள் கொடுத்து வர, இரத்த மூலம், அதன் கடுப்பு விரைவில் நீங்கி விடும்.

- காக்கை வலிப்பு வந்தவர்க்கு மூக்கில் 3 துளி குப்பை மேனிச் சாற்றை விட குணமாகும்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2023) மேழம் (ஏப்ரல் 92) [இசை-11


## வரலாறு மறைக்கப்படுகிறது! தமிழ் இளைஞர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்! - 2

ஆரியர்கள் நடு ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் கைபர், போலன் கணவாய்கள் வழியாக வந்தனர் என்பதும், அவ்வாறு அவர்கள் இந்தியாவிற்கு வந்தது, அவர்கள் மேய்த்து வந்த ஆடு, மாடுகளுக்கான மேய்ச்சல் நிலங்களாகிய பசும் புல் வெளிகளைத் தேடியே வந்தனர் என்பதும் வரலாறு. இந்நிகழ்ச்சிகள் நடந்தது கிறித்து பிறப்பதற்கு முன் (கி.மு.) 3500 முதல் 4500 அல்லது 5000 ஆண்டுக் காலங்களில் என்பர் வரலாற்றாசிரியர்கள். அஃதாவது அக்கால்சிந்துஆற்றங்கரையிலும், அரப்பா, மொகஞ்சதோராவிலும் தமிழர்கள், மிக முன்னேறிய நாகரிகங்களுடன் நல்ல வளத்தோடும் நலத்தோடும் வாழ்ந்து வந்தனர் என்பு.

அப்படி அவர்கள் வரும் பொழுது அவர்கள் பேசிக் கொண்டு வந்த மொழியே வேத மொழி, அவர்கள் இந்தியாவிற்குள் வந்த பின்னர் ஓர் 500 அல்லது 1000 ஆண்டுகளில் தான், சமசுக்கிருத மொழியினை உருவாக்கிக் கொள்கிறார்கள். அஃதாவது அக்கால வடவிந்தியப் பகுதிகளில் அன்று வழங்கிய மொழிகளில் உள்ள சொற்களைக் கூட்டி இணைத்துச் செய்யப்பட்டதால் அது சமஸ்கிருதம் என்று பெயர் சூட்டப் பெற்று வழங்கப் பெற்றது.

சம்ஸ்கிருதம் என்பதற்குக் கூட்டிச் செய்யப் பெற்றது—கலந்து செய்யப் பெற்றது என்பது பொருள்: (சம்—கூட்டல், கலத்தல், க்ருதம்—செய்யப்பட்டது. கரம்—கை; க்ருதம் — கையால் செய்யப்படுவது; ஸ்—இணைப்பொலி).

எனவே வேத மொழி வேறு; சம்ஸ்கிருதம் வேறு: ஆரியர்கள் இந்தியாவிற்குள் வரும்பொழுது அவர்களுக்கு வேதம் எனப் பெறும் நூல் இல்லை. வெறும் செப்பமற்ற, நாடோடி மொழியே அவர்கள் பேசி வந்த மொழி. அதற்கு வேத மொழி என்னும் பெயர்கூட இல்லை: ஏனெனில் ரிக் வேதத்தைச் சேர்ந்த சில, பல மந்திரங்களை மட்டுமே அவர்கள் அந்த மொழியில், வெறும் பேச்சு வழக்காகக் கூறி வந்தனர். அதனால் அந்த ரிக் வேத மந்திரங்களுக்கு ஸ்ருதி என்று பெயரிருந்தது. ஸ்ருதி என்பதற்கு வாயால் சொல்லக் காதால் கேட்பது என்பது பொருள்.

பின்னர் அவர்கள் பேச்சு வழக்கில் வழங்கி வந்த அந்த ரிக் வேத மந்திரங்களை, அவர்கள் இங்குப் புதிதாய்ச் செய்து கொண்ட சமசுக்கிருத மொழியில் எழுதி வைத்துக் கொண்டனர்; வேத மொழிக்கும் எழுத்தில்லை; அவர்கள் புதிதாகச் செய்து கொண்ட சமசுக்கிருத மொழிக்கும் எழுத்தில்லை: எனவே இரண்டிற்கும் பொதுவாக நாகரி எழுத்தைப் பயன்படுத்தி அவர்களின் நூல்களைப் பதிந்து வைக்கலாயினர்.

அக்கால் வடவிந்தியப் பகுதிகளில், தமிழ் மன்னர்கள் ஆட்சியிருந்ததாலும், அவர்களும் அவர்களைச் சார்ந்த தமிழர்களும், அவர்களினின்று திரிந்த திராவிடர்களும் மிக முன்னேறிய நாகரிகம் அடைந்திருந்ததாலும், அவர்கள் மேல் பொறாமை கொண்ட ஆரியர்கள் அவர்களை எவ்வகையிலேனும் தாழ்த்தி, இழித்து, அழிக்க முற்படலாயினர்.

எனவே முதலில் அவர்களை நிறத்தால் இழித்தனர்; நடு ஆசியப் பகுதி குளிர் மண்டிலம் ஆகையால் அவர்கள் வெள்ளை நிறங் கொண்ட தோலைப் பெற்றிருந்தனர்; இந்தியா குறிப்பாகத் தென்னிந்தியா வெப்ப நாடாகையால், இங்கு வாழ்ந்திருந்த தமிழர்களும், வடக்குமேவி வாழ்ந்த வட தமிழர்களும் அஃதாவது திரவிடர்களும் கறுத்த தோலினராக விருந்தனர், எனவே, இவர்களைப் பார்க்க வெள்ளை மேனியராக விருந்த ஆரியர்கள், இவர்களிலும் மேலாகத் தங்களைக் கருதிக் கொண்டு, தங்களை மேலுலகத்திலிருந்து வந்தவராகக் காட்டிக் கொண்டு, தேவர்கள் என்றும், நிலத்தில் வந்து வாழ நேர்ந்ததால் நிலத்தேவர்கள் என்று பொருள்படும்படி பூதேவர்கள் என்றும் உயர்த்திக் கூறலாயினர்; வட தமிழினத்தவர்களும் தங்களைப் பார்க்கினும் அவர்கள் மேனி நிறந்தவர்(நிறத்தில் சிறந்தவர்)களாக இருந்தாலும், கள்ளம் கவடற்ற தன்மையாலும், அவர்கள் கூறியதை மெய்யென்றே நம்பி அவர்களை மிகவும் மேலவராகவே மதித்தொழுகினர். இது தமிழர்களை ஆரியர்கள் நிறத்தால் ஏமாற்றியதாகும்.

தங்களை நிலத்தேவர்கள், பூதேவர்கள் என்று அவர்கள் அழைத்துக் கொண்டதால், தாங்கள் புதிதாய்ச் செய்து கொண்ட சமசுக்கிருத மொழியையும் தேவ மொழி அஃதாவது தேவர் உலகத்தில் உள்ள தேவர்களும் அவர்களுக்குத் தலைவர்களாகிய தெய்வங்களும் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் தெய்வ மொழி என்று கூறினர். அம்மொழியில் பேசினால்தான் தேவர்களும் தெய்வங்களும் விளங்கிக் கொள்வார்கள் என்று கூறி நம்பவும் செய்தனர். பொதுவாகவே சமசுக்கிருத மொழி உரத்த ஒலிகளைக் கொண்டிருந்ததாலும், அதில் பேச நிறைய மூச்சாற்றலைச் செலவழிக்க வேண்டியிருந்ததாலும், அதில் பேசுவது கடினமாக-வும், பெரிய முயற்சி செய்ய வேண்டியதாகவும் இருந்தது; எனவே இதில் அவர்களேகூட ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ள முடியாமல் இருந்தது; எனவே பிறர்க்கும் அந்த மொழியையோ அதிலுள்ள மந்திரங்களையோ சொல்லித்தர இயலாதவர்களாக இருந்தனர். அது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த மொழியாக இருந்தது, தேவ மொழி என்று அதை அவர்கள் சொல்லிக் கொள்ள வசதியாக இருந்தது. உண்மையிலேயே அந்த மொழி ஒரு சிறந்த மொழியுமன்று; அமைப்பு ஒழுங்கு உடைய மொழியும் அன்று. அமைப்பில் அஃது ஒரு கன்னா பின்னா மொழி! இலக்கணத்தில் ஒரு குருட்டுத்தனமான, தங்கள் தங்கள் விருப்பத்-திற்குப் பேசிக் கொள்ளும்படியுள்ள குழப்படியான மொழியாகும். இன்னும் சொன்னால் அஃது ஓர் உயிருள்ள மொழியென்று சொல்ல முடியாமல், செத்தமொழி என்று கூறும்படி-யான மொழியாக மட்டுமே இருந்தது. இன்னுஞ் சொன்னால் அ'து ஒரு செத்தமொழி என்று கூறக் கூடத் தகுதியில்லாத மொழியாகும். அது புழக்கத்திற்குரியதாக—உயிருடையதாக இருந்-திருந்தால்தானே செத்தமொழி என்று கூறுவதற்கும் பொருத்தமாக இருக்கும். அது பிறந்ததும் இல்லை; உயிரோடு உலவியது-மில்லை; எனவே அ'து ஓர் இறந்த மொழி. அஃதாவது அஃது ஒரு பொம்மை போன்றது. பொம்மைக்குப் பிறப்பும் இல்லை; இறப்பு மில்லை; இயக்கமும் இல்லைபோல் அதற்கும் ஒன்றுமில்லை, பொம்மைக்கு எப்படி தலைவேறு, கால்கள் வேறு, கைகள் வேறு, உடம்பு வேறாக உள்ளனவோ, அதேபோல் சமசுக்கிருத மொழிக்கு எழுத்துகள் வேறு, சொற்கள் வேறு, கருத்துகள் வேறு என்றபடி அனைத்துத்தன்மைகளும் வேறு வேறு மொழிகளிலிருந்து கட்டிச் செய்யப்பட்டது என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆனாலும் அன்றைய ஆரியர்களும்—அவர்கள் வழி வந்த இன்றைய ஆரியப் பார்ப்பனர்களும் அதை ஒரு தெய்வ மொழியென்றும், மந்திர மொழி என்றும், அரிய ஆற்றல் வாய்ந்தது என்றும், அந்த மொழி என்றென்றும் இருந்து கொண்டிருக்கின்ற மொழியென்றும், அஃது என்றுமே அழியாத மொழி என்றும் கூறி வருகின்றனர். இது மொழியால் தமிழர்-களை அவர்கள் ஏமாற்றுவதாகும். இதையும் தமிழர்களிலும், பிற இனங்களிலும் இன்றைக்கும் இந்த அறிவியல் காலத்திலும்

# அடிமை வாழ்க்கை

—மு. குலாம் முகம்மது—

*1781-ஆம் ஆண்டு !*

மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு ஜமய்காய் நோக்கி விரைந்து கொண்டிருந்தது, ஒரு கப்பல்.

அந்தக் கப்பல், வணிகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் சரக்குக் கப்பல்.

இதில் விற்பனைப் பொருள்களாக ஏற்றப்பட்டிருந்தவர்கள் 400 கறுப்பர்கள் [நீக்ரோக்கள்]

கப்பல் பாதி வழியைக் கடந்திருக்கும்.

விற்பனைப் பொருள்களாக விற்றிருந்த 400 நீக்ரோக்களில் 132 பேருக்குக் கடுமையான நோய்!

நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இனி உழைக்க இயலாதவர்களாக ஆகிவிடுவார்களோ !

வணிக மொழியில் சொன்னால் 132 'சரக்குகள்' விற்பனைக்குத் தகுதியற்றவையாக ஆகிவிடுமோ? நோய் பரவி மீதமுள்ள விற்பனைப் பொருள்களையும் அஃதாவது மீதமுள்ள நீக்ரோக்களையும் விற்பனைக்குத் தகாதவர்களாக ஆக்கிவிடுமோ?

—இது கப்பல் தலைவனின்—வணிகனின் ஐயம்—அச்சம்!

கப்பல் நெறிகளுக்கும் வணிக நெறிமுறைகளுக்கும் உட்பட்டு நோயால் பீடிக்கப்பட்ட 132 நீக்ரோக்களையும் கடலில் தூக்கி எறிந்து விடுகின்றான், கப்பல் தலைவன்.

காலைப் பிடிக்கின்றார்கள்—அந்த நீக்ரோக்கள், இரக்கம் காட்டச் சொல்லி!

கெஞ்சுகின்றார்கள்—உயிர் இரவு (பிச்சை) கேட்டு!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பற்பலர் நம்பி வருவதுதான் மிகவும் வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது.

சமசுக்கிருத மொழி தோற்றத்திற்குப் பின்னர், அவர்கள் தங்கள் ஆளுமையையும், தமிழின ஊடுருவலையும் படிப்படியாக மிகுதியாக்கிக் கொண்டே வந்தனர். அவர்களின் ஆட்களில் வலிமையான இந்திரன், அக்நி, வாயு முதலியவர்களைக் கொண்டு வட தமிழ் அரசர்களையும், தமிழின மக்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் போராடி அழித்தனர். நீர் நிலைகளை உடைத்து விட்டு ஊர்களைத் தண்ணீரில் மூழ்கச் செய்தனர்; மக்கள் குடியிருப்புகளை நெருப்பு வைத்து அழித்தனர்; தங்கள் இனத்துப் பெண்களை தமிழ அரசர்களிடமும், தமிழின வீரர்களிடமும் அனுப்பி, அவர்களை அவர்களின் வழி அடிமைப்படுத்தி வஞ்சகமாகக் கொன்றனர்; தமிழ அரசர்கள் அழிந்து போகுமாறு மந்திரங்களை முழக்கினர்; யாகங்களைச் செய்தனர், இவ்வாறான பல அழிம்புகளைச் செய்து தங்கள் ஆட்சி வலிமையை மெல்ல மெல்ல வலிவுபடுத்திக் கொண்டே வந்தனர். (தொடரும்)

பதறப் பதற, கதறக் கதற அவர்கள் கடலிலே தூக்கி எறியப் படுகின்றார்கள்;

கப்பல் தலைவன் 132 கறுப்பர்களை மட்டும் கடலில் எறியவில்லை; மாந்தம், மாந்தத்தன்மை, மாந்த உரிமைகள் இவற்றையெல்லாம் கூட கடலிலே தூக்கி எறிந்து விடுகின்றான்.

கொந்தளிக்கும் கடலோடு உயிருக்குப் போராடிப் பார்க்கின்றார்கள், அந்தக் கறுப்பர்கள்!

சற்று நேரத்தில் பிணங்களாக மிதக்கின்றனர்;

இப்படி 132 ஒன்றுமறியாக் கறுப்பர்கள் கொலை செய்யப் பட்டார்கள்;

"கொண்டு செல்லும் சரக்கிலே கெட்டுப் போன பகுதியை அப்புறப்படுத்தி விடுவதன் மூலமே மற்ற சரக்கைக் கெடாதபடி பாதுகாத்திட இயலும் என்ற நிலையில்—சரக்கின் ஒரு பகுதியை அப்புறப்படுத்திட நேர்ந்தால்—அதற்கான மதிப்புள்ள பணத்தை இழப்பீடாக காப்பீட்டுக் குழுமம் (இன்ஷூரன்ஸ் கம்பெனி) தர வேண்டும்"

—இது கப்பல் போக்குவரத்து வணிக நெறி முறை;

400 கறுப்பர்களில் 132 பேர் மேலே உள்ள நெறிக்கு உட்பட்டுக் கடலில் வீசப்பட்டனர்;

இதற்கான இழப்பீட்டை காப்பீட்டுக் குழுமம் தந்தாக வேண்டும்.

—இது கப்பல் தலைவனின்—கோரிக்கை!

மறுத்தார்கள் காப்பீட்டு (இன்ஷூரன்ஸ்) நிறுவனத்தார்;

வழக்குத் தொடர்ந்தான், கப்பல் தலைவன்;

132 ஒன்றுமறியா நீக்ரோக்களைக் கொலை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டித் தூக்கிலே தொங்கவிடப்பட வேண்டியவன், அங்கே தனக்கு இழப்பு வந்து விட்டதாகவும், அதற்கு இழப்பீடு வேண்டுமென்றும் கோரி அற மன்றத்திலே நின்றான்;

கப்பல் தலைவன் செய்தது சட்டத்திற்கும் வணிக மரபு முறைகளுக்கும் உட்பட்டதுதான்; ஆகவே இழப்பீடு தந்தே ஆக வேண்டும்."

இது அற மன்றத்தின் தீர்ப்பு!

காலப்போக்கில், கறுப்பர்கள் என்ற இந்த வணிகப் பொருட்களைக் கப்பலிலே கடத்தி வந்து விற்பனை செய்வது கட்டுப்படியாகவில்லையாம் சில வணிகர்களுக்கு!

இவர்கள் இந்த வணிகப் பொருட்களை உருவாக்கம் (உற்பத்தி) செய்யும் பண்ணைகளை அமைத்தார்களாம்!

இளமையும் எடுப்புமிக்க ஆண் நீக்ரோக்கள்—

அதே போன்ற பெண் நீக்ரோக்கள்—

இவர்களை இதற்கென ஒதுக்கி நீக்ரோ மக்களை உருவாக்கினார்களாம், அந்த வணிகர்கள்!

இதில் பிறப்பவற்றைக் கடினமான உணவு தந்து வளர்த்தும் பின்னர்,

இன்ன பண்ணையில்-இன்ன வகையில் உருவானது எனத் தரங் சொல்லி விலைகூவி விற்பாா்களாம்!

காங்கயம்—காளை—ஆரல் கோழி—என்றெல்லாம் சொல்லி விற்பதில்லையா? அதுபோலத்தான்.

—இன்றும் அமெரிக்காவில் வழக்கறிஞர்கள் சிலர் இப்படிப் பேசுகிறார்களாம்.

"நீக்ரோக்கள் அமெரிக்கர்களின் உடைமைகள், அவர்களுக்கு மாந்த உரிமைகள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்ப்பதன்று நமது கடமை..."

"என் உடைமை—இதனை நான் எப்படி வேண்டுமானாலும் நடத்துவேன். எதுவும் செய்வேன். கூடத்திலும் வைப்பேன்: குப்பை மேட்டிலும் வீசுவேன். இரவல் கொடுப்பேன்; இன்னொருவருக்கு ஈடாக மாற்றியும் கொள்வேன்..."

—நாகரிகத்தின் தூதுவன்,
—புதிய உலகின் சிற்பி,
—முன்னேற்றத்தின் முன்னோடி,
—மாந்த உரிமைகளின் மகுடம்—

இவையே நம்மில் பெரும்பாலோர் அமெரிக்காவைப் பற்றி கொண்டுள்ள கற்பனைக் கருத்து! ஆனால்—

அமெரிக்காவின் மக்கள் தொகையில் ஒரு பகுதியினருக்கு அடிப்படை மாந்த உரிமைகளே மறுக்கப்படுகின்றன; அவர்கள் நசுக்கப்படுகின்றார்கள்—ஒடுக்கப்படுகின்றார்கள்!

ஊருக்கு வெளியே அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சேரிகளிலேயே அவர்கள் வாழ முடியும்! பொது இடங்களில்—உணவகங்களில்—அருந்தகங்களில்—தங்கும் விடுதிகளில் "வெள்ளையர்களுக்கு மட்டும்—கறுப்பர்களுக்கும் நாய்களுக்கும் இங்கே அனுமதி இல்லை." என்ற அறிவிப்புப் பலகைகளைத் தொங்க விட்டு அகமகிழ்ந்தனர் வெள்ளையர்கள்.

"அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன்—அங்கே ஆட்சியாளர்கள் அரசோச்சும் மணிமண்டபம்—அதன் பெயர் வெள்ளை மாளிகை" கறுப்பர்களுக்கு அங்கே எப்போதும்—எந்த நிலையிலும் இடமில்லை என்பதை எடுத்துச் சொல்லத்தான் இந்தப் பெயராம்!

கறுப்பர்களின் விடுதலைக்காக—உரிமைகளுக்காகப்—போராடியவர்களில் ஒருவர் மார்ட்டின் லூதர் கிங்!

நிற வேறுபாடு மாந்த உரிமைகளை மறுப்பதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் அக்கறை காட்டிய அமெரிக்க அதிபர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்ட ஜான் எஃப் கென்னடி அவர்கள்!

மார்ட்டின் லூதர் கிங் தம்முடைய போராட்டத்தின் ஒரு கட்டத்தில், இப்படிக் கேட்டாராம் கென்னடியிடம்: "குடியரசுத் தலைவர் அவர்களே!

'நிறவேறுபாடு ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் தாங்கள் வீற்றிருக்கும் மாளிகையின் பெயரே 'வெள்ளை மாளிகை' என்றுதான் இருக்கின்றது-பொருத்தமாக இல்லையே?"

கறுப்பர்களிடத்தில் சற்று அக்கறை காட்டிய குடியரசுத் தலைவர் கென்னடி இப்படி விடை சொன்னாராம்:

''அது நெடுநாட்களாக இருந்து வரும் பெயர்; வேறு பொருள் கொள்ளத் தேவை இல்லை.''

ஆமாம்! அதிபர்கள் அமரும் மணிமண்டபத்திற்கு நெடுநாட்களுக்கு முன்னரே பொருத்தம் பார்த்துப் பெயர் சூட்டி இருக்கின்றார்கள்—இப்படி!

உரிமைகள் மறுக்கப்படுவதற்கும்—நாய்களுக்கும் இன்னோரன்ன விலங்கினங்களுக்கும் நிகராக நடத்தப்படுவதற்கு அவர்கள் செய்த கொடுஞ் செயல்தான் என்ன? கறுப்பர்களாகப் பிறந்தது ஒன்றைத் தவிர வேறேதும் அறியமாட்டார்கள் அவர்கள். இந்த விலங்கு நிலையிலிருந்து விடுதலை தேடி அவர்கள் எத்தனையோ கொள்கைகளை அணுகுமுறைகளை மேற்கொண்டார்கள்.

இவர்கள் அப்படி ஏற்றுக் கொண்ட அணுகு முறைகளில்—அல்லது மேற்கொண்ட கொள்கைகளில் ஒன்று—தங்களைத் தாழ்ந்தவர்களாகவும்—தீண்டத் தகாதவர்களாகவும் — தட்டு மூட்டுப் பொருள்களாகவும் நடத்தும் வெள்ளைநிற வெறியர்களை வெட்டிச் சாய்ப்பது!

இந்தக் கொள்கையை வார்த்தெடுத்துச் செயல் வடிவம் தந்தவர் 'நாட் டர்னர்' என்பவர்! 1831-ஆம் ஆண்டு ஆகசுட்டு திங்கள் 21-ஆம் நாள் இவர்தம் சிந்தனைக்குச் செயல் வடிவம் தந்தார். தொடக்கத்தில் 6 பேரைக் கொண்டு தொடங்கினார். பின்னர் பல்கிப் பெருகிற்று இவரது அணி.

வெள்ளையர்களை வெட்டி வீழ்த்தி—நிறவெறியர்களைப் பொறி கலங்க வைத்தார். பிடிபட்டார்! தூக்கிலிடப்பட்டார்! ஆனால் இவரது அணியைப் பற்றிய அச்சம் வெள்ளையர் மனங்களிலே மறைந்தொழிய பல ஆண்டுகளாயிற்றும்.

'அமெரிக்காவில் வெள்ளையர்களோடு வாழும்வரை எங்களுக்கு மாந்த உரிமைகளில் எதுவும் கிடைக்காது. எங்களைத் தனியாக-தனி நாடு காண—அங்கே கறுப்பர்களின் அரசமைத்து அரசோச்ச விட்டு விடுங்கள்—என்று பிரிவினைகோரிப் பார்த்தனர். பின்னர், இயலவில்லை! இப்படி எத்தனையோ கொள்கைகளின் பின்னால் ஓடிப் பார்த்தனர்-பலனில்லை! முடிவாக ஒரு கொள்கையிடம் புகலிடம் தேடினர். —(அடுத்த இதழில்)

கட்டுரைக்கு அடிப்படையாய் அமைந்தவை:

1) அண்ணாவின் 'வெள்ளை மாளிகை'
2) Death and Life of Malcom
3) Benjamin Godman
4) The Autobiography of Malcom,
5) As told to alex Haley

# ஒழுங்கின்மையை ஒழுங்கு படுத்துவதே வாழ்க்கை!

— அதியமான் —

மாந்தரினம் வாழும் குமுகாயத்தில் அவர்கள் ஒழுக்கமாக வாழ்வதற்கான நெறிமுறைகளைத் தொகுத்துக் கொடுப்பவர்கள், சான்றோர்கள், அறநெறியாளர்கள். இவர்கள் மக்களை நெறி வழிப்படுத்துவதற்கு அறநெறி என்ற ஒழுக்க வழி முறைகளைக் கூறி இருக்கிறார்கள். இவை வாழ்க்கைச் சாரங்களை அகத்துக் கொண்டமையால் இந்நெறி முறைகளை அறநெறிச்சாரம் என்று கூறுகிறோம். இதனை ஒழுக்க நெறி எனவும் கூறலாம்.

இந்த அறநெறிகள் மாந்த இனங்களின் மரபுத் தொடர்புடையனவால் அவைமாறா. மாற்றவும் முடியாது. 'அறஞ் செய்ய விரும்பு' என்ற நெறியை, அறஞ் செய வேண்டாம் என்றோ, அல்லது அறஞ் செய்யக் கூடாது என்றோ, அல்லது அறஞ் செய்வதை சூழ்நிலைக்கு ஏற்றாற் போன்று நிறுத்தி வைக்கவோ முடியாது.

எனவே "அறஞ் செய விரும்பு" என்ற மெய்ப் பொருள் அப்படியேதானிருக்கும். மாந்தர்களுக்கு இன்பம் வரும் வழி அறமே ஆகும். அதனால் இன்பத்தை நாடி வாழும் மாந்த இனம், அதனைப் பெற அறம் முகாமை என்பதால் அறச் செயல் நிலையானது.

அறநெறிச் சார வழி வாழ்க்கையை நடத்திச் செல்லும் போது தவறுகள் நடந்து விடலாம். அதனையே ஒழுங்கின்மை என்பர். அந்த ஒழுங்கின்மையை ஒழுங்குபடுத்துவதுதான் வாழ்க்கை என்பதை உணர்தல் வேண்டும். அதனால்தான் வள்ளுவர்,

"உலகத்தோடு ஒட்டஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள் 140)

என்றார்.

உலகமென இங்கு பேராசான் குறிப்பது உலகச் சான்றோர்களை. சான்றோர்கள் கூறும் உலக வாழ்க்கையோடு சேர்ந்து வாழ்தலே கல்வி கற்றோரின் கடமை. பரிமேலழகர் இக்காலத்திற்கு ஒவ்வாதனவாயின் அவற்றை விட்டுவிடல் வேண்டுமென விளத்தம் தருகிறார்.

அறநெறி என்பது எக்காலத்திற்கும் பொருந்துவனவாகவே இருக்கும். ஆனால் காலத்திற்கு ஏற்றாற்போல அதனை ஒழுங்கு படுத்திக் கொள்வதே நல்லது. பரிமேலழகர் கூறுவது போன்று அறத்தைக் காலத்திற்கு ஒத்து வரவில்லையெனில் விடல்வேண்டும்

எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அறந்தவறினாலுங் கூட அதனையும் ஒழுங்கு படுத்த முடியும். அறமே வேண்டாம் என்றால் உலகம் விரைவில் அழிந்து விடுமே!

அறச் செயலாலேயே உலக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சூழ்நிலைச் சிக்கலால் அறஞ் செய்ய முடியவில்லை என்றால் என் செய்வது? அறம் கட்டாயமாக ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய செயல், அதனை மறக்கவே கூடாது. பலவகையிலும் அறத்தைச் செய்ய வேண்டுமென வள்ளுவம் வலியுறுத்துகிறது. பிறருக்குப் பொருள் கொடுப்பது மட்டும் அறமன்று. மாந்தர்கள் துன்பங்கண்டு அதனை நீக்க உதவுவதுவும் அறமே! ஆகையால் அதனை மறக்கவோ மறுக்கவோ முடியாது. அறஞ் செய்ய இயலாதவன் எங்ஙனம் அறஞ் செய்வான்? அறத்தைச் செய்யாமல் விடுவதும் ஒழுங்கின்மையே! அறச் செயலற்றவனை எப்படி ஒழுங்குபடுத்துவது? "இரத்தலும் ஈதலேபோலும்..." (குறள் 1054) என்று கூறி நம் பெருந்தகை அறஞ் செய்ய வழிப் படுத்துகிறார். கரத்தலை (ஒழித்து வைப்பதை) கனவில்கூட நினையாத ஒருவர் சூழ்நிலை கரணியத்தால் இறுகிய மனத்தினராகி விட்டார். அவரிடஞ் சென்று ஒரு பொருளை வேண்டி இரக்கும் திறமையால் அவருடைய இறுகிய மனத்தை இளக்கி ஈத்துவக்கும் பண்பை அவருக்கு உண்டாக்கி விடுகிறார். இரப்பவர் அவருக்கு ஈதல் என்ற குணத்தைக் கொடுக்கிறார்.

எனவே அறஞ் செய்ய வேண்டாம் என்று காலத்தால் ஏற்பட்ட மாற்றம ஒழுங்கின்மையானாலும் அதை வள்ளுவம் ஒழுங்குபடுத்தி அறஞ் செய்து புகழ் பெறும் நிலையை உண்டாக்குகிறது. ஒழுங்கின்மையை ஒழுங்குபடுத்துகிறார் பேராசான். அடடா, இதைவிட மக்கள் குமுகாயத்தை வாழ வழிகாட்டும் குமுக அறிவியல் அறிஞரை எங்கே காண முடியும்? மக்களை வழிப்படுத்தும் திறமை திருவள்ளுவர் ஒருவருக்குத்தானுண்டு.

வீட்டிற்குள் குப்பைகள் வருவது இயல்பே! குப்பைகள் வருகின்றன என்பதால் வீட்டை இடித்துவிட முடியுமா? வீட்டினுள் குப்பைகள் வரவர அவற்றைக் கூட்டி வெளியில் தள்ளிவிட்டு வீட்டைத் தூய்மைப்பட வைக்க, ஒழுங்கு படுத்துவதே அறிவுடைமை.

இதுபோன்று குடும்பத்தில் பல சிக்கல்கள் வரத்தான் செய்யும். அவற்றை ஒழுங்குபடுத்துவதே அறிவாகும்.

அதனால் குமுக வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் அறநெறி வாழ்க்கையில் அல்லது ஒழுங்கான வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்பட்டாலும், இழப்புகள், இழிவுகள் ஏற்பட்டாலும் அவற்றை அறிவால் போக்கி, ஒழுங்கின்மைகள் ஏற்பட்டாலும் அவற்றை ஒழுங்குபடுத்தி அறவழி வாழ்வை நடத்திச் செல்வதே செப்பமான வாழ்வாகும். ○

# அருவருப்புப் பொத்தகங்கள் பெருகி வருகின்றன!

தமிழ்நாட்டில் அருவருப்பு(ஆபசா)த் தாளிகை(பத்திரிகை)களும், பொத்தகங்களும் மிகவும் இயல்பாக விற்பனை செய்யப் பெறுவதைக் காண முடிகிறது. இதன் காரணமாக இளைஞர்களும் இளைஞைகளும், மாணவர்களும் மாணவிகளும் ஏன் சின்னஞ் சிறுவர்களும்கூட பாலியல் (Sex) உணர்ச்சிகளுக்குத் தூண்டப் படுகிறார்கள்!

(போதை)வெறிமயக்க மருந்துகளுக்கு அடிமை ஆவதைப் போல் இந்தப் பொத்தகங்களுக்கு அடிமையாகி மதிகெட்டு, ஒழுக்கச் சீரழிவுக்கு ஆளாவோர் பெருகி வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு வாழ்க்கையின் பிற ஈடுபாடுகளில் கவனம் குறை கிறது; அவர்களின் முன்னேற்றமும் தாக்கம் பெறுகிறது; தடைப்படுகிறது.

இப்படிப்பட்ட பொத்தகங்களை வகை வரிசையாகப் பிரித்து விற்கிறார்கள். அவற்றிற்கு மறைவுக்குறிச் (Code) சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பு (Special), XX அல்லது XXX போன்ற குறியீடுகள் உள்ளன. அருவருப்பு(ஆபாச)க் கதைகளுக்கிடையில் பாலியல் புகைப்படங்கள் வைக்கப்படு-கின்றன. சில இழிவான கீழ்மையான படங்கள் வெளிநாட்டுத் தாளிகைகளிலிருந்து எடுத்துக் கையாளப்படுகின்றன.

சில பெரிய பொத்தகக் கடைகளிலேயே இத்தகைய சிறப்பு (ஸ்பெஷல்) பொத்தகங்கள் விற்கப்படுகின்றன. வெளிநாட்டுப் பாலியல் (செக்ஸ்) பொத்தகங்கள் மற்றும் தாளிகை(பத்திரிகை)களை உரு 50 முதல் உரு 300 வரை சில வாடிக்கையாளர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்களாம். சென்னையில் அண்ணாசாலை, எழும்பூர், மற்றும் தொடர் வண்டி நிலையங்கள் போன்ற மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் உள்ள கடைகளில் கூட அருவருப்புப் பொத்தகங்கள், தாளிகைகள் விற்பனை செய்யப்படு கின்றன.

திருச்சியும், சிவகாசியும், மக்களின் மனங்களைப் பாழடிக்கும் இத்தகைய பொத்தகங்களை அச்சடிக்கும் நடுவங்களாக இருக் கின்றன. உரு 5-இலிருந்து உரு 100 வரை விலை வைத்து இங்கு இத்தகைய பொத்தகங்கள் அச்சிடப் படுகின்றனவாம்!

சட்டங்களையும் காவல் துறையினரையும் ஏமாற்றி நடமாடும் தனியார் நூலகங்களும் இத்தகைய மஞ்சள் தாள்கள், நூல்கள் ஆகியவற்றை இளவட்டங்களுக்குக் கொடுத்து நற்பணி செய் கிறார்களாம்.

சில பாலியல் மாத இதழ்களும், மாதமிருமுறை இதழ்களும் அருவருப்புக் கதைகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவதோடு தூவல் (பேனா) நண்பர்கள் பகுதிகளையும் முகவரிகளையும் வெளி யிடுகின்றன. வாலையர்களும்(வாலிபர்களும்), இ ன் றை ப்

பெண்களும் இந்த முகவரிகளுக்குத் தொடர்பு கொண்டு, ஒருவரை ஒருவர் பாலியல் உறவுக்கு அழைத்துக் கொள்ளும் அருவருப்புச் செயல்களும் வேறு பரவலாக நடைபெறுகின்றன.

அரசும் காவல்துறையும் இத்தகைய பொத்தகங்களையும், இதழ்களையும் தடை செய்தல் வேண்டும். இதன் மூலம் வாசகர்களின் மனத்தில் ஒழுக்க வீழ்ச்சியும், சீரழிவும் ஏற்படுவதையும் தடுக்க முடியும். இந்த வகையில் காவல் துறையும் அரசும் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்?

சென்ற மாதம் உரு 10 இலக்கம் மதிப்புள்ள அருவருப்புப் பொத்தகங்கள், இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அந்த விற்பனையாளர்களுக்கு என்ன தண்டனை கொடுத்தார்கள், தெரியுமா? ஒவ்வொருவருக்கும் வெறும் உரு 400/- தண்டம் போட்டதோடு சரி!

இத்தகைய பொத்தகங்களை யார் அச்சிட்டவர், யார் வெளியிட்டவர் என்னும் விளக்கங்கள் தெரிந்திருந்தும் காவல் துறையினர் அவர்களைக் கண்டுகொள்வதுமில்லை; நடவடிக்கை எடுப்பதுமில்லை. எப்பொழுதாவது நகரின் ஒரு மூலையிலுள்ள கடைகளில் திடீர் ஆய்வு என்னும் பெயரில் (அதுவும் தங்களுக்கு வழமை (மாமூல்) கொடுக்காத கடைகளில்) 200, 300 பொத்தகங்களைக் கைப்பற்றித் தண்டம் என்னும் பெயரில் ஓர் எளிய தொகையைத் தண்டல் செய்வதோடு அவர்களின் கடமை முடிந்ததாக அமைந்து விடுகின்றனர். (தப்பித் தவறி இவர்களின் மேல் உண்மையாகவே கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற காவல்துறை அதிகாரிகளிடம், அரசியல் சாய்காலைப் பயன்படுத்தி நடவடிக்கையையே ஒன்றுமில்லாமல் செய்தும் விடுகின்றனர்.)

இத்தகைய குற்றங்களுக்கு இந்திய அரசியல் சட்டம் 292 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் இதன்படி அதிக அளவாக 2 ஆண்டுச் சிறைத் தண்டனை அல்லது தண்டம் அல்லது இரண்டும் வழங்கப்படலாம்.

மக்களுக்குத் தீமை விளைவிக்கும் அருவருப்புப் பொத்தக வணிகத்தைத் தடை செய்ய இந்தச் சட்டம் போதாது. ஊழல் அரசியலாலும் உறுதியற்ற நடவடிக்கைகளாலும் இவற்றை ஒழிக்க முடியாது.

கடுமையான இழப்பு எதுவும் ஏற்படாததாலும், சிறிய முயற்சியில் பெரிய அளவு ஊதியம் கிடைப்பதாலும், இந்த வணிகத்தைத் தொடர்ந்தும், தொல்லைகளுக்கிடையிலும் செய்து வருகிறார்கள்.

அருவருப்பு நூல்களைத் தடுப்பதில் பொதுமக்களின் பங்கு முகாமையானது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அருவருப்புக்கு எதிரான விழிப்புணர்வு அவர்களிடம் வர

வேண்டும், நூல்களில், இதழ்களில் அருவருப்பான கருத்து களெனில் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும். அவற்றை வெளி யிட்டவர்களை எச்சரிக்கை செய்யவேண்டும். அதுபற்றி அரசுக்கும் காவல் துறைக்கும் செய்தி தர வேண்டும்.

இதையெல்லாம் நாம் செய்ய வேண்டுமெனில் அருவருப்பு (ஆபாசம்) என்றால் என்ன என்று தெளிவாகப் உணர்ந்திருக்க வேண்டும்.

கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கை மேற்கொள்வதை (இல்லறை காயாக) எழுதுவது அருவருப்பன்று. அந்த உறவை விளக்கி எழுதும்போது அங்கு அருவருப்பு வந்து விடலாம். காதல் என்ற பெயரில் பலரின் வரைமுறை மீறிய ஒழுக்கக் கேடு களை எழுத்தாளர்கள் சிலர் ஞாயப்படுத்தி எழுதுகின்றனர். பண்பாடு, ஒழுக்கம், நன்னடத்தை என்பவற்றைப் பழங் கருத்து என்று ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள். இத்தகைய கருத்துகள் கொண்ட கதைகள், கட்டுரைகள் சில பெரு விற்பனை இதழ்களில் வெளி வருகின்றன.

ஆனந்த விகடன், குமுதம், குங்குமம், ஜூனியர் போஸ்ட் போன்ற தாளிகைகள் கூட சில நேரங்களில் வெளியிடும் படங்கள் கதைகள், கட்டுரைகள் அருவருப்பின் எல்லையையே தொடு கின்றன. நடிகைகளின் உறுப்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வண்ணப் படங்களை இவை வெளியிடுகின்றன. அப்படி வெளியிட்டால்தான் இதழ்கள் விற்கும் என்று இந்த 'வணிகர்கள்' கருதுகிறார்கள்.

அது சரி, இந்த மாதிரிப் படங்களுக்கெல்லாம் தணிக்கை கிடையாதா? நடவடிக்கை எடுக்கக் கூடாதா? இவற்றின் ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் சற்று ஒழுக்க உணர்வுடன் சிந்தித்தால் இவை வராமல் தடுக்கலாம் அல்லவா?

— ஜே. மீரா மைதீன், நன்றி 'சமரசம்' மார்ச்சு 16-31,92.


# தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | உருபா 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | : | ,, 18.00 |
| தனியிதழ் | : | ,, 3.00 |

# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய மாத இருமுறை இதழ்.

| | |
|---|---|
| தனியிதழ் | விலை உரு. 1-50 |
| ஆண்டுக் கட்டணம் | ,, ,, 36-00 |
| அரையாண்டுக் கட்டணம் | ,, ,, 18-00 |

தென்மொழி, தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை5.

# உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

2. மங்கோலியா: (Mongolia) —குடியரசு.
நிலப்பரப்பு : 15,65,000 ச. அ. மா.
மக். தொ. : 18,20,000
மக். தொ. பெ. 2.9% (ஆண்டுக்கு)
மக். வா. எ. ஆண் ; 61, பெண் : 65 (ஆண்டு)
எழுத்தறிவு : 80%
தலைநகர் : உலான் பாட்டர் (Ulaan Baatar)
மொழி : மங்கோல், உருசியன், சைனீசு
நாணயம் : 100 மங்கோ

3. வட கொரியா: (North Korea) —குடியரசு.
நிலப்பரப்பு : 1,22,098 ச. அ. மா.
மக். தொ. : 1,84,90,000
மக். தொ. பெ. : 3.2% (ஆண்டுக்கு)
மக். வா. எ. ; ஆண் ; 70, பெண் : 78 (ஆண்டு)
எழுத்தறிவு : 85%
தலைநகர் : பியோங்யாங் (Pyongyang)
மொழி : கொரியன்
நாணம் : 100 ச்சோன்

4. தென் கொரியா : (South Korea) குடியரசு.
நிலப்பரப்பு : 98,992 ச. அ. மா.
மக். தொ. : 3,99,50,000
மக். தொ. பெ. : 16% (ஆண்டுக்கு)
மக். வா. எ. : ஆண் : 68, பெண் : 68 (ஆண்டு)
எழுத்தறிவு :- 92%
தலைநகர் : சௌல் (Soul)
மொழி : கொரியன்
நாணயம் : ச்சோன்

5. துருக்கி : (Turkey) —குடியரசு.
நிலப்பரப்பு : 7,79,452 ச. அ. மா.
மக். தொ. : 4,80,00,000
மக். தொ. பெ. : (ஆண்டுக்கு) : 2.5%
மக். வா. எ. : ஆண் : 58, பெண் : 63 (ஆண்டு)
எழுத்தறிவு : 70%
தலைநகர் : அங்காரா (Ankara)
மொழி : துர்க்கிக
நாணயம் : துர்க்கிக லிரா

6. லெபனான் (Lebanan) - குடியரசு.

நிலப்பரப்பு : 10,452. ச.அ.மா.
மக்: தொ: : 35,00,000
மக்: தொ. பெ: ; (ஆண்டுக்கு) 0.8%
மக்: வா: எ: : ஆண் : 63, பெண் : 67 (ஆண்டு)
எழுத்தறிவு : 75%
தலைநகர் : பெய்ரூட் (Beirut)
மொழி : அராபெய்க் (Arabaic)
நாணயம் : லெபனீசு பவுண்டு—100 பையாசுட்ரசு

7. சிரியா (Syria) —குடியரசு

நிலப்பரப்பு : 1,85,180: ச.அ.மா:
மக். தொ. : 98,40,000
மக்: தொ. பெ: : 3.8% (ஆண்டுக்கு)
மக். வா: எ. : ஆண் : 63, பெண் : 66 (ஆண்டு)
எழுத்தறிவு : 65%
தலைநகர் : டமாஸ்கஸ் (Damascus)
மொழி : அராபிக் (Arabic)
நாணயம் : சிரியன் பவுண்டு—100 பயாஸ்டர்

8. இராக் (Iraq) —குடியரசு

நிலப்பரப்பு : 4,34,924: ச.அ:மா:
மக்: தொ. : 1,40,00,000
மக்: தொ. பெ: : 3.4%
மக், வா. எ: : ஆண் : 54, பெண் : 57 (ஆண்டு)
எழுத்தறிவு : 70%
தலைநகர் : பாக்தாத்
மொழி : அராபிக், குர்திஷ்
நாணயம் : இராக் தினர்—30 திர்ஹம்—1000 பில்ஸ்

9. இரான் (Iran) —குடியரசு

நிலப்பரப்பு : 16,48,100;
மக். தொ: : 4,38,30,000
மக்: தொ. பெ: : 3.0%
மக்: வா: எ: : ஆண் : 53, பெண் : 54 (ஆண்டு)
எழுத்தறிவு : 48%
தலைநகர் : டெஃக்ரான்
மொழி : பார்சி (பெர்சியன்), துருக்கிக் மொழிகள் குர்தீஸ்
நாணயம் : ரியால் — 100 டினார்

(தொடரும்)

(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்; பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள், குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர், அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.)

## 1. செந்தணலின் குறும்புகள் (தொடர்ச்சி)

—சித்திரச் செந்தாழை ஆறிறைவன். அறி. மு.

### 6. தணலுக்கு ஒரு தங்கை!

செந்தணலுக்கு ஒரு தங்கை—யாழிசை—பிறந்து விட்டாள்; அவனுக்கு அவளை மிகவும் பிடித்துள்ளது. குழந்தை சற்றே அவனைவிட வண்ணமாகவும், இளஞ்சிவப்பு அதிகமாகவும் இருந்தாள்.

செந்தணல், 'எல்லாக் குழந்தைகளைக் காட்டிலும் என் தங்கைதான் அழகாக உள்ளாள்' என்று பெருமை பேசுகிறான்; பள்ளிக்குப் போகும் போதும், பள்ளி விட்டு வந்தவுடனும் அவளை நெருங்கி முத்தம் கொடுத்துவிட்டுக் கை கால்களையெல்லாம் தொட்டுப் பார்த்து மகிழ்ந்து கொள்ளுகிறான்.

மருத்துவமனையிலிருந்து 2-ஆவது நாள் இரவுதான் வீட்டிற்கு வந்து, குழந்தை முதல் இரவாகத் தூங்கினாள். அவள் தூங்கிய பின்பு, தணல் குட்டிக்கு ஏதோ மனத்தில் ஓர் ஏமாற்றம். அவளுடன் நான் வீட்டிற்கு வந்ததிலிருந்து நான் தணலை அதிகம் கவனிக்க முடியவில்லை, படுக்கும்போது கூட அவனை அருகில் படுக்க வைத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது. எனவே அவன் அன்றிரவு தனியே போய்ப் படுத்துக் கொண்டான். ஆனால் ஏதோ வாய்க்குள் முணகிக் கொண்டேயிருந்தான்.

அவன் முணகுவது என்னென்று காது கொடுத்துக் கேட்டேன்.

''யாழிசை என்னைவிட அழகாக உள்ளாள்; நான் நன்றாக இல்லை; கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். என் முகம்

அழகாக இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். இனிமேல் என்னை யாருக்கும் பிடிக்காது; அம்மா, என்னை விரும்பமாட்டார்கள். அப்பா என்னை விரும்ப மாட்டார்கள்'' என்று தனியே சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

அவன் மனத்தைப் புரிந்து கொண்டவுடன், நானும் அவரும் அவனிடம் அவன் ஆறுதல் அடையும் படி எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். அவனிடம் குழந்தையைப் பற்றி அவன் மனம் புண்படுமாறு நாங்கள் எதுவுமே சொல்லவில்லை. அவனே நினைத்துக் கொண்டிருக்கிறான், அப்படி!

அதன் பிறகு நான் அவனைப் பற்றி அதிகம் கவனம் செலுத்தத் தொடங்கினேன், அவனிடம் பேசுவதற்கும், பாடம் சொல்லிக் கொடுப்பதற்கும், கதை சொல்வதற்கும் சிறிதுநேரம் அவனுடன் படுப்பதற்கும் நேரம் ஒதுக்கினேன். அவரும் அப்படியே அவனிடம் கவனம் செலுத்தினர்.

இப்பொழுதெல்லாம் அவன் முன்பைவிட நன்றாகவே இயங்குகிறான், ஆனால், தங்கையின் மேல் கொள்ளை ஆசை வைத்திருக்கிறான். பூவைத் தொடுவதுபோலவே தொடுகிறான். விளையாட்டாக அவளைத் திட்டினாலும் சண்டைக்கு வருகிறான்.

ஆனால், அண்மையில் ஒருநாள் இரவு படுத்துக் கொண்டே என்னிடம் இவ்வாறு மீண்டும் பேசினான்.

''நாம் இந்தியாவிற்குத் திரும்பிப் போகும்போது அம்மம்மா அம்மப்பா எல்லாருமே யாழிசையைத்தான் அதிகம் விரும்பு வார்கள். சித்தி (பிறையைச் சொல்லுகிறான்) என்னை இனிமேல் எப்போதும் விரும்பமாட்டாள், அவ்வளவுதான்'' என்று ஆங்கிலத்தில் என்னிடம் உண்மையான வருத்தத்துடன் கூறினான்.

என்றாலும் குழந்தையை வந்து பார்ப்பவர்கள் எல்லாரும் 'யாழிசை செந்தணலைப் போலவே உள்ளாள்' என்று கூறக் கூற அவனுக்கு ஒரு வகையில் நிறைவு, மகிழ்வு என்றாலும், ''அப்படியென்றால் நான் பெண்ணைப்போல் உள்ளேனா? இல்லை அவள்தான் ஆணைப்போல் உள்ளாளா?'' என்று கேட்டான். (தொடரும்)

---

ஃ கடலின் ஆழத்தை அளந்தறிவதற்கு ஆய்வறிஞர்கள் ஒலியலைகளைப் பயன்படுத்துகின்றனர். இதற்கு நாம் காதால் கேட்கும் பொதுவான ஒலியைப் பயன்படுத்த முடியாது. அதன் அலைகள் எல்லாத் திசைகளிலும் பரவிச் சிதறிப் போகுமாம். எனவே அவர்கள் கேளா ஒலியலைகளை (ultrasonic waves)ப் பயன்படுத்துகின்றனர். இவை நேர்கோட்டில் செல்லக் கூடியவை. இவை கடலின் தரைப்பரப்பு, மற்றும் கற்பாறைகள், நீர்மூழ்கிகள், திமிங்கலங்கள் முதலியவற்றிலும் பட்டு எதிரொலிக்கும். ஆனால் இவையனைத்தையும் ஆய்வாளர்கள் அவ்வொலியலை போய்த்திரும்பும் நேரத்தைக் கொண்டும் ஒலிமாற்றங்களையறிந்தும் அவற்றை வேறுபடுத்தி அறிந்து கொள்கின்றனர்.

# தெரிந்து கொள்ளுங்கள்

ஃ கண் பார்வை நன்றாக இருக்க 'ஏ' சாரம் (விட்டமின்) மிகுதியும் தேவை; அது கீரை வகைகள், முருங்கைக் கீரை, காரட் கிழங்கு, ஈரல், மீன் ஆகியவற்றில் உள்ளது; இவற்றில் ஏதாவது ஒன்று நாள்தோறும் நம் உணவில் சேர்ந்தால் கண் கோளாறுகள் வரா.

ஃ புருனே (போர்னியோ — கிழக்கிந்தியத் தீவுகளில் ஒன்று) ஓர் இசுலாமிய நாடு. அந்த நாட்டில் ஆடல்கள், பாடல்கள், மதுக்குடிப்புகள் முதலியவை தடைசெய்யப்பெற்றுள்ளன.

ஃ சென்னை நகரம் தோன்றி 350 ஆண்டுகள் ஆகின்றன.

ஃ இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் 22 கோடி பேர் வாழ்கின்றனர். முசுலீம்கள் 12 கோடி பேர். கிறித்துவர்கள் 4 கோடி பேர். பௌத்த, சமண சமயத்தவர்கள் 1 கோடி பேர். சீக்கியர்கள் 1.25 கோடி பேர்.

ஃ தமிழ்நாட்டில் ஏறத்தாழ 150 தமிழ்ச் சித்தர்கள் என்பவர்கள் வாழ்ந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்களுள் பதினெட்டுச் சித்தர்களைப் பற்றிய விளக்கங்களே முழுமையாகத் தெரிந்துள்ளன. சித்தர்கள் மெய்யறிவிலும் மருத்துவத்திலும் மிகச் சிறந்த அறிவர்களாவார்கள்.

ஃ தமிழக மீனவர்கள் கிழக்குக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் பொழுது அடிக்கடி இவர்களுக்குச் சிங்களக் கடற்படையினரால் பலவகைத் தொல்லைகள் நிகழ்வதுண்டு. அவ்வாறு 1983 முதல் 1991 - ஆம் ஆண்டு ஆகத்து மாதம் முடிய, சிங்களக் கடற்படை, தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகள் 286. அந்த வகையில் தாக்கப்பட்ட படகுகள் 323. தாக்கப்பட்ட மீனவர்கள் 486 பேர், அழிக்கப்பட்ட படகுகள் 51. கொல்லப்பட்ட மீனவர்கள் 50 பேர். துமுக்கிச் சூட்டில் காயமடைந்த மீனவர்கள் 57 பேர். சிங்களக் கடற் படையால் கைப்பற்றிச் செல்லப்பட்ட விசைப்படகுகள் 67. தளைப்படுத்தப்பட்ட மீனவர்கள் 205 பேர்.

ஃ மகாராட்டிர மாநிலம் பீட் நகரில் பாபுராவ் அங்குலே என்பவரும் அவர் மனைவி சுமித்ரா என்பவரும் திருமணம் ஆகி ஏழு ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தனராம். பின்னர் தங்கள் குல தெய்வத்திடம், தங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தால் அவற்றில் ஒரு குழந்தையைப் பலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டார்களாம். அப்படியே அந்த வேண்டுதலைக்குப் பின் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்ததாம். அதற்குப் பின் இரண்டு ஆண்டுகள் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்ததாம். அது இரண்டரை மாதங்கள் ஆனதும் இருவரும் அதை எடுத்துச் சென்று கோவிலில் வெட்டிப் பலி கொடுத்தனராம். குழந்தையைக் கொன்ற குற்றத்திற்காக இப்பொழுது அவர்கள் இருவரும் தண்டனை பெற்றுச் சிறையில் உள்ளனர்.

# இந்துக்களும் இந்துமதமும்!

○ 'இந்து' என்பது இப்பொழுது ஒரு மதம் என்று குறிப்பிடப் பெறுகிறது. இப்படி ஒரு மதம் என்றுமே இருந்ததில்லை; அப்படி இருந்ததாகச் சொல்லப்படுவதற்கு ஒரு சான்றும் இல்லை, இதற்கு இருவகை விளக்கங்கள் சொல்லப்படுகின்றன:

'இந்து' என்னும் சொல் பாரசீகர் பேசிவரும் 'பார்சி' மொழிச் சொல். அதற்குப் பொய்யன், அடிமை, திருடன் என்று பொருள்; இது அரபி மொழியிலும் வழங்குகிறது;

1191-ஆம் ஆண்டில் சகாபுதின் கோரி என்ற மகமதிய அரசன் தில்லியை வென்று தன் அரசை நிலைபெறச் செய்தான்; அவன் வடநாட்டில் சிந்து ஆற்றங் கரையிலிருந்த ஆரியர்களை, அவர்கள் தங்கள் இனத்துக்குத் தீங்கு செய்ததால் - எதிராக இருந்ததால் அவர்களை இந்துக்கள் என்று அழைத்தான். அந்தப் பெயரே நாளடைவில் ஆரியப் பார்ப்பனர்களுக்கு வழங்கத் தொடங்கியது. அவர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்பெற்றது நிலைப்பட்ட-வுடன், அவர்கள் பின்பற்றி வந்த 'ஸ்மார்த்தம்' என்னும் வேதமதமும் 'இந்துமதம்' என்று அழைக்கப் பெறலாயிற்று; இஃதொரு கருத்து விளக்கம்.

இன்னொரு கருத்து விளக்கம் இது: பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் அலெக்சாண்டர் இந்தியாவின்மேல் படை யெடுத்து வந்த பொழுது, சிந்து ஆற்றங்கரையிலிருந்த ஆரியர்-கள் சிந்துக்கள் என அறிமுகப்படுத்தப் பெற்றனர். 'சி' என்னும் எழுத்து கிரேக்க மொழியில் 'ஹி' என்று வரும். எனவே ஸிந்துக்கள் என்றது 'ஹிந்துக்கள்' என்று ஒலி பெயர்த்து அழைக்கப் பெற்று, அவர்களின் பின்பற்றிய ஆரிய வேத மதமும் ஹிந்து மதம் என்று அழைக்கப் பெற்றது;

---

# உயர்ந்த தருமம் எது?

ஒருமுறை முகமது நபி அவர்கள் தம் தோழர்களிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது, 'ஆயிரம் வெள்ளி நாணயங்களை விட ஒரு வெள்ளி நாணயம் அதிகப் பெருமையைப் பெற்று விட்டது' என்றார்.

'அஃது எப்படி?' என்று தோழர்கள் வினவினார்கள். நபியவர்-கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்கள்.

ஒருவரிடம் இரண்டே இரண்டு வெள்ளி நாணயங்கள் இருந்தன; அவற்றில் ஒன்றை எடுத்து அவர் தருமம் செய்தார்;

இன்னொருவரிடம் நிறைய சொத்தும் பணமும் இருந்தன; அவர் ஒரு நற்செயலுக்கு அவற்றில் ஆயிரம் வெள்ளி நாணயங்களை அன்பளிப்பாகக் கொடுத்தார்;

இவ்விரண்டு தருமங்களில் முதலதற்குத்தான் அதிகப் பெருமையும் உயர்வும் அதிக நன்மையும் ஆகும்;

---

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)